# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 53/2021** **நாள்: 20.10.2021**

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டம் காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக இன்று 20.10.2021 பிற்பகல் நடைபெற்றது.**

மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கு தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் இன்று (20.10.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேர்தல் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் விவரம், தேர்தல் சம்மந்தப்பட்ட பணியிடங்களின் காலியிடங்களை பூர்த்தி செய்தல், தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம், வாக்குச்சாவடிகள் கண்டறிதல், கோவிட் - 19 வழிகாட்டு நெறிமுறைகளின்படி வாக்குச்சாவடிகளை நிர்ணயம் செய்தல், வாக்குப்பதிவு இயந்திரங்களின் இருப்பு, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் முதன்மை பயிற்றுநர்களுக்கு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் குறித்த பயிற்சி, மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் இயக்குவதற்கான பயிற்சி அளித்தல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்திட ஏதுவாக அனைத்து தேவையான முன் நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொண்டிட தொடர்புடைய மாநில தேர்தல் அலுவலர்களையும் அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

..2..

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களில் 22.10.2021 அன்று நடைபெறவுள்ள மறைமுகத் தேர்தலின்போது, கோவிட் - 19 வழிகாட்டு நடைமுறைகளை (SOP) பின்பற்றுதல், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் குறித்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. பா.பொன்னையா இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் திரு. விசு மகாஜன், இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்), திரு. க. அருண்மணி, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு.தனலட்சுமி, சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

20/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்